# பிரச்சாரம்!

செய்யும் போது வெடித்து ஒருவரின் கை போனது. அவர் இப்போதும்கூட ஒற்றைக் கையுடன் சினிமாக்களில் நடித்து வருகிறார். அப்போதே இது மாதிரி டம்மி குண்டு செய்பவர்கள் எல்லோரையும் ஒருங்கிணைக்க ஒரு முயற்சி நடந்தது. "எல்லோரும் ஒன்று சேர்ந்து முதல்வரிடம் போவோம். எங்களுக்கு குடோன் வாடகைக்கு எடுத்து லைசென்ஸ் வாங்க வசதியில்லை. முதல்வரே அரசு சார்பில் ஓரிடத்தில் குடோன் கட்டிவிட்டால் 'நாங்கள் எல்லாம் அங்கு வாடகைக்கு ரூம் எடுத்து இந்த டம்மி குண்டுகளை பத்திரமாக வைத்து பிழைப்பு நடத்திக் கொள்கிறோம்' என்று கேட்போம்" என்று ஒரு முயற்சி மேற்கொண்டார்கள். ஆனால் ஒற்றுமையின்மையால் அது கைகூடவில்லை.

இப்போது 'பாம் ரவி' இறந்துள்ள நிலையில், அவரது உடலைக்கூட அவர் வாடகைக்கு இருந்த வீட்டிற்குக் கொண்டு போக முடியவில்லை. ஏனென்றால் வீடுதான் டம்மி குண்டு வெடித்ததில் தரைமட்டமாகிவிட்டதே! இதனால் பாம் ரவியின் உடலை அதே பகுதியில் உள்ள அவரது மாமா வீட்டில் வைத்து புதன்கிழமையன்று இறுதி அஞ்சலி செலுத்தினர். அங்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்த தென்னிந்திய திரைப்பட ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர், "முன்பு ஒருவருக்கு ஒரு கை போனது. இப்போது ஓர் உயிரே போய்விட்டது. இனி யாரோ? அதனால் விரைவில் முதல்வரைச் சந்தித்து, நம் போன்று டம்மி வெடி செய்வோருக்கு தனியாக குடோன் ஒன்று கட்டித் தரச் சொல்ல வேண்டும்" என்றார்.

எத்தனையோ சினிமாக்களுக்கு 'ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ்' கொடுத்த பாம் ரவியின் குடும்பத்திற்கு சீனியர் நடிகர்கள் யாரும் பெரிய உதவி செய்யவில்லை என்ற குரல், அந்த இறுதி ஊர்வலத்தில் வந்தவர்களிடம் கேட்டது.

## மாமன்ற உறுப்பினரும், மக்கள் சேவகர் விருதும்!

சென்னை மாநகராட்சியில் கே.கே.நகர் மண்டலச் சேர்மனாக இருப்பவர் தனசேகரன். அவர் இப்பகுதியில் உள்ள இந்திய குடும்ப நலச் சங்கத்தின் வைரவிழாவில் கலந்து கொண்டார். இது ஏ.வி.எம். அறக்கட்டளையும் இணைந்து இருக்கும் ஓர் அமைப்பு. இந்த அமைப்பின் சார்பில், 130 வது வட்ட மாமன்ற உறுப்பினரும், 9வது மண்டலக் குழுத் தலைவருமான க.தனசேகரனுக்கு 'மக்கள் சேவகர்' என்ற விருதினை சமீபத்தில் வழங்கினர். சுகாதாரத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சென்னை மாநகர மேயர் மா.சுப்பிரமணியன். ஏ.வி.எம். நிறுவனர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிடைத்த இவ்விருது பற்றி தனசேகரனிடம் பேசினோம். அவர், "எனது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் மக்கள் சேவைகளை அதிகம் செய்கிறேன். என் கவுன்சிலர் மேம்பாட்டு நிதியில் இருந்து இந்த அமைப்பிற்கு சுகாதார மையங்கள் கட்ட நிதியுதவி செய்திருக்கிறேன். இப்படி மக்கள் சேவை செய்வதால் இந்த விருதினைக் கொடுத்திருக்கிறார்கள். 'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கவுன்சிலர், மக்கள் குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்ற நோக்கத்துடன் செயல்படுபவன் நான். அதற்கு இது போன்ற விருதுகள் ஊக்கமளிக்கும். மேலும் கலைஞரின் அரசிற்கும், துணை முதல்வர் ஸ்டாலினுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் மாமன்றத்தில் செயல்படுவேன்" என்றார்.!

எல்லா கவுன்சிலர்களும் இப்படி இறங்கிவிட்டால் சென்னையில் மக்கள் குறைகளே இருக்காதே!

❐





மௌரியா



ஆதிராஜாராம்